**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.218/2024 - PW-4**

| | |
|---|---|
| Name | திரு.சௌந்தராஜன் |
| Husband/Father Name | இராமசந்திர பிள்ளை |
| Village /Area | பழைய பாளையம் |
| Taluk | சோளிங்கர் |
| Occupation | விவசாய கூலி |
| Age | 44 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 26.08.2025.

**(எதிரி காணொலி காட்சி முலம் மத்திய சிறைச்சாலை வேலூரில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டார் )**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 08.05.2024 அன்று நான் என்றுடைய விவசாய நிலத்தில் இருந்து கோவீந்தாங்கல் ஜங்ஷனில் உள்ள டீக்கடைக்கு வந்தேன் அப்போது போலீசார் சண்முகத்தை அடித்து போட்டது குறித்து சம்பவ இடத்தில் விசாரித்து கொண்டிருந்த போது நானும் கிருஷ்ணன் மகன் அன்பும் அந்த இடத்தில் இருந்தோம். எங்கள் முன்னிலையில் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தாயார் செய்தனர் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலவாது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சண்முகத்தின் இரத்த கறை படிந்த காரை மற்றம் இரத்த கறை படியாத காரை துண்டுகளை சிறிதளவு கைப்பற்றி சென்றனர். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அது **அதசாஆ.3** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் இரத்த கறை படிந்த காரை மற்றும் இரத்த கறை படியாத காரை துண்டுகள் தான் போலீசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றியது அவைகள் முறையே **சா.பொ.3** மற்றும் **சா.பொ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.08.28 15:39:04 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.